# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

### பிரிவு 4 ( 2015 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 9)

**விவிலிய வினாவிடைப் போட்டி**

1. திருவிவிலியத்தின் முதல் புத்தகம் எது? தொடக்கநூல்
2. கடவுள் நோவாவுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளம் எது? **வானவில்**
3. கடவுள் யாரிற்கு இஸ்ராயேல் என்று பெயரிட்டார்? **யாக்கோப்பிற்கு**
4. யாக்கோப்பின் பிள்ளைகளுள் கனவிற்கு விளக்கம் கொடுத்தவர் யார்? **யோசேப்பு**
5. யோசப் தனது சகோதரர்களால் எத்தனை வெள்ளிக்காசிற்கு விற்கப்பட்டார்? **20 வெள்ளிக்காசு**
6. திருவிவிலியத்தில் இரண்டாவது புத்தகம் எது? **விடுதலைப் பயணம்**
7. கடவுள் மோயீசனுக்கு முட்செடி நடுவே காட்சி கொடுத்த மலை எது? **ஓரேபு**
8. மோசே திக்குவாயனாக இருந்தபடியால் அவருக்கு பதிலாக பாரவோனிடம் பேசியது யார்? **ஆரோன்**
9. இஸ்ராயேல் மக்களை வழிநடத்திய பெண் நீதித்தலைவர் யார்? **தெபோரா**
10. இஸ்ராயேலரின் முதல் அரசன் யார்? **சவுல்**
11. தாவீதின் தந்தை பெயர் என்ன? **ஈசாய்**
12. கோலியாத்தை வீழ்த்திய வீரன் யார்? **தாவீது**
13. சாமுவேலின் பெற்றோர் பெயர் என்ன? **எல்கானா, ஆன்னா**
14. சிறுவன் சாமுவேலை கடவுள் எத்தனை முறை அழைத்தார்? **4**
15. கடவுளிடம் இறைஞானத்தை வரமாக கேட்ட மன்னன் யார்? **சாலமோன்**
16. திருச்சபையின் பிறந்த தினம் எது? **பெந்தக்கோஸ்தே பெருவிழாவன்று**
17. பெந்தக்கோஸ்தே பெருவிழாவான்று தூய ஆவியார் எவ்வடிவில் தோன்றினார்? **நெருப்பு**
18. பாவங்களை மன்னிக்கும் அருட்சாதனங்கள் எவை? **திருமுழுக்கு, ஒப்புரவு, நோயில் பூசுதல்**
19. ஞாயிறு திருப்பலியில் எத்தன்ன வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன? **3**
20. திருப்பலியின் எந்தப்பகுதியில் அப்பம் இயேசுவின் உடலாகவும், இரசம் இயேசுவின் இரத்தமாகவும் மாறுகின்றன? **நற்கருணை வழிபாடு**
21. திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் பொருள்கள் யாவை? **நீர், எண்ணெய், மெழுகுதிரி, வெண்ணிற ஆடை**
22. ஊதாரி மகன் உவமையில் தன் தவறை உணர்ந்து தந்தையிடம் திரும்பி வந்தவன் யார்? **இளைய மகன்**
23. குள்ளமானதால் இயேசுவைப் பார்க்க அத்தி மரத்தின் மேல் ஏறியவர் யார்? **சக்கேயு**
24. இயேசு தோற்றம் மாறும் போது யேசுவோடு இருந்தவர்கள் யாவர்? **பேதுரு, யோவான், யாக்கோபு**
25. இயேசுவின் திருத்தூதர்களில் உயிர்த்த இயேசுவை இறுதியாக கண்ட திருத்தூதர் யார்? **தோமா**

26. இயேசுக்கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்த இறைவாக்கினர் யார்? **எசாயா**

27. நல்ல சமாரியனின் உவமையில் விழுந்துகிடந்த, காயமடைந்து கிடந்த நபரின் அருகில் வந்து வீதியின் மறுபக்கமாக உதவி செய்யாமல் சென்ற இரண்டாவது நபர் யார்? **லேவியன்**

28. அருள்மிகு பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்று வாழ்த்தியவர் யார்? **கபிரியேல் தூதர்**

29. இயேசு சீடரின் பாதங்களை கழுவிய நிகழ்வு எப்போது நடைபெற்றது ? பெரிய வியாழன்

30. பேதுரு இயேசுவை எத்தனை முறை மறுதலித்தார்? **3**

31. இயேசுவுக்கு சிலுவை சுமக்க உதவியவர் யார்? **சீரேன் ஊர் சீமோன்**

32. “ நீ யூதரின் அரசனா?” என்று இயேசுவைப் பார்த்து கேட்டவர் யார்? **பிலாத்து**

33. இரவு உணவின் போது இயேசுவின் அருகில் அவரது மார்பு பக்கமாய் சாய்ந்து கொண்டு அமர்ந்திருந்த சீடர் பெயர் என்ன? **யோவான்**

34. நற்கருணையில் வீற்றிருப்பவர் யார்? **இயேசு**

**35.** இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சென்ம பாவமில்லாது பிறந்த முதல் பெண் யார்? **அன்னை மரியா**

**பின்வரும் இறைவார்த்தைகள் பரீட்சையின் போது முன்பின்னாக குழப்பி தரப்படும். அவற்றை வரிசைப்படுத்தி எழுத கற்றுக் கொள்ளுங்கள்**

“இதைப் பெற்று உண்ணுங்கள். இது என் உடல்” மத்தேயு 26: 23

## மனனப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

**காலைச் செபம்**

காலையில் எழுந்தவுடன் கண்களை மூடி வெளி உலகில் நடக்கும் சத்தங்களை நினைத்துப் பார்ப்போம். பறவைகளின் குரலைக் கேட்கலாம், மலர் காலையில் மலர்கிறது, சூரியன் காலையில் உதிக்கிறது, அதிகாலையில் இவையனைத்தும் இறைவனுக்கு வணக்கம் சொல்லி புகழ்கின்றன. இறை சாயலாக படைக்கப்பட்ட நாம் இவைகளை விட இறைவனை அதிகமாகப் புகழ வேண்டாமா? காலைச் செபத்தை இப்படி செபிப்போம்:

அன்புத் தந்தையே, உமக்கு என் காலை வணக்கம், இந்த நாளைத் தந்தமைக்கு நன்றி. இக்காலை வேளையில் என்னை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். நான் இன்றைய நாள் முழுவதும் நல்ல கிறிஸ்தவப் பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

மருதமடு மாதாவே

மனுக்குலத்தின் தாயாரே

கருணையருட் செபமாலை

கனிந்திட நாம் செய்தாயே

மகிமை நிறை மாமரியே

மாதவருள் பூரணியே

மக்கள் பாவம் பொறுத்தருள

மன்றாடாய் நின் சுதனை

பாவம் செய்தோம் பாரினிலே

தவம் செய்வோம் உன் தயவால்

பட்சமுடன் பாரம்மா

பாவியெம்மைக் காரம்மா